Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
**DHINATH DHALAM** Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 85 | திங்கள் Monday | 26.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# டெல்லியின் ஆதிக்கத்துக்கு தமிழ்நாடு தலைகுனியாது

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உறுதி



டெல்லியின் ஆதிக்கத்துக்கு தமிழ்நாடு தலைகுனியாது என முதல்வர் மு.க.ஸ்டாலின் (ஜன.25) தெரிவித்துள்ளார்.

எப்படியாவது ஹிந்தியை திணிக்க வேண்டும் என மத்திய அரசு துடிப்பதாகவும் ஆனால், மொழிப்போர் தியாகிகளின் மூச்சுக்காற்று தமிழர்களை இயக்கிக்கொண்டு இருப்பதால் அது நடக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் (ஜன.25) நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:

"தாய் நாட்டிற்கு தமிழ்நாடு எனப்பெயர் வைத்த அறிஞர் அண்ணா பிறந்த மண்ணில் இருந்து பேசுவது மிகவும் பெருமை. ஆண்டுதோறும் ஜனவரி 25 ஆம் தேதி மொழிப்போர் தியாகிகளை நினைவுகூரும் வகையில் வீரவணக்க நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

மொழிப்போர் தியாகிகள் அனைவருக்கும் மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரியாரை போன்ற குரு, கலைஞர் கருணாநிதியைப் போன்ற சீடரைப் பெற்றவர் அறிஞர் அண்ணா.

சில நேரங்களில் அறிஞர் அண்ணாவை பார்த்தால் எனக்கே பொறாமையாக இருக்கும். மிக மிக உணர்ச்சிகரமான மனநிலையில் நான் நின்றுகொண்டிருக்கிறேன்.

என் அரசியல் பயணத்தின் உந்துசக்தி அறிஞர் அண்ணா. மொழிப்போர் தியாகிகளை நினைத்தால் உணர்ச்சி பொங்குகிறது

**தமிழ்நாட்டை வெல்ல முடியாது**

புதிய தேசிய கல்விக் கொள்கையைப் பயன்படுத்தி மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் நம் மீது ஹிந்தியை திணிக்க வேண்டும் என ஒரு கும்பல் துடிக்கிறது.

பணத்தையும் அதிகாரத்தையும் வைத்து பணியவைக்கப் பார்க்கிறார்கள். அடிபணிந்துபோக நாம் என்ன அடிமைகளா? அண்ணா, கருணாநிதி போன்றவர்களின் பரம்பரையில் வந்த தமிழ்ப் பிள்ளைகள் நாம்.

ஹிந்தி ஆதிக்கத்துக்கு எத்தனை மொழிகள் பலியாகியுள்ளன? 1938 ஆம் ஆண்டிலிருந்தே ஹிந்தி திணிப்புக்கு எதிராகப் போராடுகிறோம். இது ஒரு பண்பாட்டு படையெடுப்பு.

தமிழ்நாட்டை அடிமைப்படுத்த தில்லியில் இருந்து படையெடுத்து வருகிறார்கள். நாம் பார்க்காத படையெடுப்பா? எத்தனை முறை வந்தாலும் தமிழ்நாட்டை உங்களால் (பாஜக) வெல்ல முடியாது என உறுதிபடக் கூறுகிறேன்.

**குற்றங்கள் பற்றி பேசத் தகுதி இல்லை**

தோல்வியில் இருந்து பாடம் கற்காமல் உள்ளது பாஜக. மீண்டும் அதிமுகவின் தோள்களில் இருந்தவாறு பயணிக்கிறது. தேர்தல் சீசன் வந்தாலே பிரதமர் மோடியின் வடைகள் வந்துவிடும். ஆனால், இம்முறை மோடியின் வடை மாவு புளித்துவிட்டது.

டபுள் என்ஜின் எனக் கூறி வடமாநில மக்களை ஏமாற்றியதைப்போன்று தமிழக மக்களை ஏமாற்ற முடியாது.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று பேசுகிறார் பிரதமர். ஒரு பிரதமர் பொத்தாம்பொதுவாக பேசக் கூடாது. மகாராஷ்டிரத்தில் பேச வேண்டியதை மதுராந்தகத்தில் பேசுவது நியாயமா?

பெண்களுக்காக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் அதிகம். அதிக மாணவிகள் கல்லூரிக்குச் சென்று படிப்பது தமிழ்நாட்டில்தான். இந்தியாவில் அதிக பெண்கள் ஆலைகளில் பணிபுரிவது தமிழ்நாட்டில்தான்.

பாஜக ஆளும் மாநிலத்தில் பில்கிஸ் பானு என்ற கர்ப்பிணி பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த கயவர்களை விடுதலை செய்தது பாஜக அரசுதான்.

பெண்கள் நிலைஎன்ன என்பது குறித்து மணிப்பூர் சென்று பேசுங்கள். குற்றங்களைப்பற்றி பேச உங்களுக்கு (நரேந்திர மோடி) என்ன தகுதி இருக்கிறது.

**பத்து தோல்வி பழனிசாமி**

குஜராத் மோடியா? இல்லை, இந்த லேடியா? என தமிழ்நாடு முழுக்க ஜெயலலிதா கேட்டார். அதனையெல்லாம் மோடி மறந்துவிட்டார். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள்.

பாஜகவுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதை தேர்தலின்போது தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாக செய்து அனுப்புவார்கள். 2019ஆம் ஆண்டிலிருந்து எந்த தேர்தலிலும் வெற்றி காணாதவர் பழனிசாமி. அவர் சாதா பழனிசாமி அல்ல, பத்து தோல்வி பழனிசாமி.

தமிழ்நாடு ஏற்கெனவே நன்றாக வளர்ந்திருக்கிறது. நீங்கள் வந்து அதை கெடுக்காமல் இருந்தால் போதும். கடந்த நாடாளுமன்ற தேர்தல் நினைவிருக்கிறதா? தமிழ்நாட்டிற்கு எத்தனை முறை வந்தீர்கள்? அதற்கான பரிசுதான் அந்த தோல்வி.

2026 தேர்தல் களமானது ஆரிய – திராவிட போரின் மற்றொரு களம்தான். அண்ணா பிறந்த காஞ்சி மண்ணில் இருந்து சொல்கிறேன், திராவிட மாடல் அரசின் ஆட்சி தொடரும்.

மொழிப்போர் தியாகிகள் மீது உறுதியெடுப்போம். 7 வது முறையாக தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான ஆட்சி அமைப்போம். தில்லியின் ஆதிக்கத்துக்கு தமிழ்நாடு என்றும் தலைகுனியாது. தீ பரவட்டும்" என முதல்வர் பேசினார்.




# “திமுகவுக்கு இதுதான் கடைசி தேர்தல்” எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்



சென்னை:

தமிழ்நாட்டில் இனி எப்போதும் திமுக ஆட்சிக்கு வராது. அந்த கட்சிக்கு இதுதான் இறுதி தேர்தல் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக கூறினார்.

தமிழ்நாட்டில் இன்னும் சில மாதங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளுங்கட்சியான திமுக மீண்டும் ஆட்சி கட்டிலில் அமர முழு வீச்சில் தேர்தல் யுக்திகளை கையாண்டு வருகிறது. மறுபுறம் பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் தொடர் வீழ்ச்சியை சந்தித்த அதிமுக, அந்த சரிவில் இருந்து மீள்வதற்கு இத்தேர்தல் மிக முக்கியமானதாக உள்ளது. தவிர, நாம் தமிழர் கட்சியை தொடர்ந்து விஜயின் தவெகவும் தேர்தல் ரேஸில் களமிறங்குகிறது. இதனால் 2026 சட்டமன்ற தேர்தல் கடும் போட்டியாக இருக்க போகிறது. அதிமுகவை பொறுத்தவரை தொடர் தோல்விகளுக்கு பிறகு எப்படியாவது இந்த தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டத்தில் உள்ளது.

இதன் காரணமாக கூட்டணி விஷயங்களில் எதிர்பாரா ட்விஸ்டுகளையும் பார்க்க முடிகிறது. முதலில் வெற்றி; மற்ற விவகாரங்களை பின்னர் பார்த்துக்கொள்ளலாம், என்ற ஒற்றை கருத்துடன் எடப்பாடி பழனிசாமி மட்டுமல்ல, தே.ஜ., கூட்டணியில் உள்ள பாஜக, அமமுக உள்ளிட்ட கட்சிகளும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன. இந்நிலையில், தமிழ்நாட்டில் இனி எப்போதும் திமுக ஆட்சிக்கு வராது என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிரடியாக பேசி உள்ளார்.

சென்னை சூளை பகுதியில் நடைபெற்ற ஜெயின் சமூகத்தினருடைய திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர் எஸ்பி வேலுமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது, ஜெயின் சமூக பாரம்பரிய படி எடப்பாடி பழனிசாமிக்கு தலையில் சாபா கட்டப்பட்டது. அதனை தொடர்ந்து மணமக்கள் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் மோதிரம் மாற்றிக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய எடப்பாடி பழனிசாமி, "தமிழ்நாட்டில் இனி எப்போதும் திமுக ஆட்சிக்கு வராது. திமுகவுக்கு இதுதான் இறுதி தேர்தல். கடந்த தேர்தலின்போது திமுக கொடுத்த வாக்குறுதிகளில் நான்கில் ஒரு பங்கு கூட நிறைவேற்றவில்லை. எல்லாத் தரப்பு மக்களும் போராட்டத்தில் இறங்கி உள்ளனர். மருத்துவர்கள், இடைநிலை ஆசிரியர்கள், பகுதி நேர ஆசிரியர்கள், செவிலியர்கள் என தமிழகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழகமே போராட்ட களமாக மாறிவிட்டது. திமுக, மக்கள் வெறுப்பை சம்பாதித்துள்ளது. இந்த தேர்தலுடன் மக்கள் திமுகவுக்கு விடை கொடுத்துவிடுவார்கள்." என தெரிவித்தார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# என்ன சூழ்ச்சி செய்தாலும், அழுத்தம் கொடுத்தாலும் அடங்கிப் போக வேண்டிய அவசியம் இல்லை; த.வெ.க. தலைவர் விஜய் பேச்சு



சென்னை,

தவெக செயல்வீரர்கள் கூட்டத்தில் விஜய் பேசியதாவது:

மிக முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை அழுத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன். நமக்கு ஏதாவது அழுத்தம் இருக்குமோ என்று நினைக்கிறீர்களா? அழுத்தமா? நமக்கா? அதெல்லாம் இல்லை. இந்த மாதிரி அழுத்தங்களுக்கு எல்லாம் அடங்கிப் போகிற ஆளா நான்?

அழுத்தம் இருக்கிறதா என்று கேட்டால், அழுத்தம் உள்ளது; ஆனால் நமக்கு இல்லை. மக்களுக்கு இருக்கிறது. மாற்றி மாற்றி ஏமாந்த மக்கள் அழுத்தத்தில் இருக்கின்றனர். தவெகவை மக்கள் நம்புகின்றனர். அடிமையாக இருக்க நான் அரசியலுக்கு வரவில்லை. விஜய் இப்போதுதான் வந்திருக்கிறார். இவருடன் யார் வரப்போகிறார்கள் என்று நம்மை குறைத்து மதிப்பிடுகிறார்கள். 30 வருடங்களாக நம்மை குறைத்து மதிப்பிடுகிறார்கள். ஆனால் மக்கள் நம்மை சரியாக மதிப்பிடுகிறார்கள்.

ஊழல் செய்யவே மாட்டேன். ஒரு பைசாவையும் தொட மாட்டேன். எனக்கு அதைத் தொட வேண்டிய அவசியம் இல்லை. ஒரு துளி ஊழல் கூட படிய விட மாட்டேன். மக்கள் எனக்கென்று. பாஜகவிடம் அதிமுக நேரடியாக சரண் அடைந்துவிட்டது. திமுக தீய சக்தி. தவெக மீது மக்களுக்கு நம்பிக்கை வரும் வகையில் கட்சியினர் செயல்பட வேண்டும் என்ன சூழ்ச்சி செய்தாலும் அழுத்தம் கொடுத்தாலும் அடங்கிப் போக மாட்டேன்.

தப்பு செய்தால் யாராக இருந்தாலும் தப்பிக்கவே முடியாது என்ற பயம் இருக்க வேண்டும். தயவு செய்து எல்லோரும் ஒற்றுமையாக இருந்து வேலை செய்ய வேண்டும். யாருக்காகவும், எதற்காகவும் நம் அரசியலை நாம் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. ஆளுங்கட்சிக்கு மற்றும் ஆண்ட கட்சிக்கு பூத் என்றால் என்ன தெரியுமா? கள்ள ஓட்டு போடும் இடம். நடைபெறவுள்ள தேர்தல் ஒரு ஜனநாயகப் போர்; இந்த ஜனநாயகப் போரில் முன்னணியில் நிற்கக் கூடிய நீங்கள்தான் தளபதிகள். முழித்துக் கொண்டிருக்கும் போதே முழியை தோண்டி எடுத்துச் செல்லக்கூடியது இந்த தீய சக்தி"

இவ்வாறு அவர் பேசினார்.

# நாயக்கன்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.20 லட்சத்தில் திருந்தவெளி கலை அரங்கம்

## MP கணபதி ராஜ்குமார் ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்

கோவை பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நாயக்கன்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட நாயக்கன்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூபாய் 20 லட்சம் ஆண்டு பாராளுமன்ற தொகுதி வளர்ச்சி நிதியின் மூலம் ரூபாய் 20 லட்சம் மதிப்பில் பள்ளி வளாகத்தில் திருந்தவெளி கலை அரங்கம் புதிதாக மகாலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, ஒன்றியச் செயலாளர் கார்த்திக், கென்னடி குரூப் செல்வ-



மதிப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் கட்டப்பட்டுள்ள திருந்தவெளி கலை அரங்கத்தை கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி பி ராஜ்குமார் ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்.

கோவை பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நாயக்கன்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட வள்ளி நகர் பகுதியில் நாயக்கன்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு 400 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இப்பள்ளியில்கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணதி பி ராஜ்குமாரின் 2024-2025 ஆம் அமைக்கப்பட்டது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கலை அரங்கத்தின் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றகோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி பி ராஜ்குமார் திறந்தவெளி கலை அரங்கை ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் சந்துரு ஜெகவி தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் இளமுருகன் அனைவரையும் வரவேற்றார். முன்னாள் நாயக்கன்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் சாந்திபிரியா, துணைத் தலைவர் சின்னராஜ், எஸ் எம் சி தலைவர் நம்பி, உதவி செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன்,உதவிபொறியாளர் ராகுல், ஒப்பந்ததாரர் ரவி என்கிற பாலசந்திரன் உள்பட ஆசிரியர்கள், மாணவ, மாணவியர், பெற்றோர் என பலர் பங்கேற்றனர். நிகழ்ச்சியை தமிழ் ஆசிரியர் முனியாண்டி தொகுத்து வழங்கினார்.இறுதியாக உதவி தலைமை ஆசிரியர் சங்கர் நன்றி கூறினார்,

முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வந்த பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ப ராஜ்குமாருக்கு பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும், இருபுறமும் மாணவர் நின்று கைகளை தட்டியும் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர்.



தூத்துக்குடியில், மொழிப்போர் தியாகிகள் தினத்தை முன்னிட்டு வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் அரங்கில் தமிழ் மொழிகாக்க தன்னுயிர்தந்த தியாகிகளின் உருவப்படங்களுக்கு வடக்கு மாவட்டம் திமுக செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் மாலை அணிவித்து மலர் தூவி வீர வணக்கம் செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ஆனந்த சேகரன். மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆறுமுகம், ராஜ் மோகன் செல்வின், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி என் மதியழகன், மாநகர துணை செயலாளர் முருக இசக்கி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் சீனிவாசன், வழக்கறிஞர் அமைப்பாளர் வழுதி இளம்பரிதி, சுற்றுச்சூழல் அணி மாநகர துணை அமைப்பாளர் மகேஸ்வரசிங், மாநகர வழக்கறிஞர் அமைப்பாளர் ஆனந்த கபீரியல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, முன்னாள் மேயர் கஸ்தூரி தங்கம் மாமன்ற உறுப்பினர் சரவணகுமார் உள்பட ஏராளமானவர்கள் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மானகிரி பங்கை சார்ந்த கொரட்டியில் புனித செபஸ்தியார் ஆலய திருவிழா திருப்பலி இனிதே நடைபெற்றது. இத்திருப்பலி யை மானகிரி பங்குத்தந்தை எட்வர்ட் ஜெயக்குமார் மற்றும் தூத்துக்குடி மறை மாவட்ட அருட்தந்தைலாசர்அவர்களும்இணைந்துதிருவிழாதிருப்பலியைநிறைவேற்றினார்கள். அனைத்து நிகழ்வுகளையும் கொரட்டி இறைமக்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். தேர்பவனியில்கொரட்டிஇறைமக்களும்மற்றும்சமயசார்பற்றஅனைவரும்ஊர்மக்களும் கலந்து கொண்டு இறை ஆசீர் பெற்றுச் சென்றனர்.

# கெரிகேப்பள்ளி ஊராட்சியில் குடிநீர் பற்றாக்குறை சரி செய்ய முன் வருவார்களா?

## அரசு அதிகாரிகளுக்கு பொதுமக்கள் வேண்டுகோள்






கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் கெரிகேப்பள்ளிஊராட்சிபடவனூர்கேட்ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகே பரந்தாமன் வட்டத்தில் ஊராட்சி மன்றதலைவர் பொறுப்பில் இருக்கும்போது ஒரு மினி டேங்க் அமைத்து சுமார்20 குடும்பங்களுக்கு தண்ணீர் வழங்கி வந்தனர்.

தற்போது அந்த மினி டேங்க் பழுது பார்ப்பு என்ற பெயரில் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற அதிகாரிகள் மினி டேங்க்கை எடுத்துக் சென்று விட்டனர் இதனால் இந்த வட்டத்தில் இருக்கும் சுமார் 20 குடும்பங்கள் தண்ணீர் இன்றி சிரமப்படுகின்றனர் மேலும் கோடை காலம் நெருங்குவதால் இவர்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது இதனால் பள்ளி மாணவர்களுக்கு குளிக்க தண்ணீர் இல்லை மற்றும் வேலைக்கு செல்லும் பெண்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள் எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக நேரில் ஆய்வு செய்து பொதுமக்களுக்கு குடிநீர் பற்றாக்குறை இன்றி தீர்க்க வைக்க அதிகாரிகள் முன் வரவேண்டும்என்று கோரிக்கைவைக்கின்றனர் விதை உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பார்களாசம்பந்தப்பட்டதுறைஅதிகாரிகள் பொதுமக்கள் எதிர்பார்ப்பு.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆணைக்கு இணங்க தாய்மொழி தமிழைக் காத்திட தன்னுயிரை ஈந்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பாக மணல்மேடு மாவட்ட அலுவலகத்தில் வீரவணக்க நாள் அனுசரிக்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் , மாநில கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஈரோடு இறைவன்,மாவட்ட கழக துணைச் செயலாளர்ஆ.செந்தில்குமார்,மாவட்டபொருளாளர் ப.க. பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம்,பகுதி கழகச் செயலாளர்கள் அக்னி சந்துரு, பொ. ராமச்சந்திரன், தண்டபாணி மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி,மாணவரணிநிர்வாகிகள்கலந்துகொண்டனர்.

# ஊத்தங்கரையில் 16வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் 16-வது தேசிய இந்நிகழ்வில் ஊத்தங்கரை வட்டாட்சியரும், உதவி வாக்காளர் பதிவு ங்களை எழுப்பினர்.

ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலக வளா-




வாக்காளர் தினத்தை முன்னிட்டு இன்று (25.01.2026) பிரம்மாண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஊத்தங்கரை (தனி) சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பதிவு அலுவலரும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருமான சிவக்குமார் இந்தப் பேரணிக்குத் தலைமைதாங்கினார்.

அ லுவலருமான ராஜலட்சுமி, தேர்தல் துணை வட்டாட்சியர் சக்தி ஆகியோர் முன்னிலைவகித்தனர். இதில் ஊத்தங்கரையுனிக்கலைமற்றும் அறிவியல் கல்லூ ரி மற்றும் வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூ ரி மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டு வாக்களிப்பதன் அவசியம் குறித்து முழக்க கத்தில் தொடங்கிய இந்தப் பேரணி, நகரின் முக்கியப் பகுதியான நான்கு முனைச் சந்திப்பு வழியாகச் சென்றது. முக்கிய வீதிகளின் வழியாக வலம் வந்த பேரணி, பொதுமக்களிடையே வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்திவிட்டு மீண்டும் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே நிறைவு பெற்றது.

# ஊத்தங்கரையில் இது நம்ம ஆட்டம் 2026

## முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா கோலாகலமாக துவங்கியது



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அரசு விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைமற்றும்தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இது நம்ம ஆட்டம் 2026 என்ற தலைப்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா போட்டிகள் தொடங்கின. ஊத்தங்கரை ஒன்றிய அளவிலான இப்போட்டிகளை, காவல் உதவி ஆய்வாளர் ஜெயகாந்தன்விளையாட்டுபோட்டிகளைதொடங்கிவைத்தார். ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தவமணி மற்றும் பாலாஜி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, வீரர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்த விளையாட்டுத் திருவிழாவில் ஊத்தங்கரை ஒன்றியத்திற்குட்பட்ட 34 ஊராட்சிப் பகுதிகளில் இருந்து 16 வயது முதல் 35 வயது வரையிலான சுமார் 350-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். முன்னதாக,இப்போட்டிகளுக்காக விளையாட்டு வீரர்கள் அனைவரும் ஆன்லைன் வாயிலாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர் இந்த விளையாட்டு போட்டியில் கிரிக்கெட், வாலிபால், கபடி, எறிப்பந்தாட்டம்,கயிறு இழுத்தல்.தடகளப்போட்டிகள், கேரம் மற்றும் குண்டு எறிதல். உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றது

இன்று நடைபெற்ற ஒன்றிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இங்கு வெற்றி வாகை சூடிய வீரர்கள், அடுத்ததாக நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத்தகுதி பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வில் அரசு விளையாட்டு மைதான பொறுப்பாளர் ஆண்டனி, உடற்கல்வி ஆசிரியர்கள் அருள், மேகநாதன், நீலவர்ணன், பாஸ்கர், திருமால், மணி உள்ளிட்டோர் போட்டிகளைச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர். வீரர்களை உற்சாகப்படுத்த ஊத்தங்கரை பகுதி பொதுமக்கள் திரளாக வந்து போட்டிகளைக் கண்டு களித்தனர்.




திருப்பூர் மாவட்டம் காந்தி நகர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இண்டர்நேஷனல் கராத்தே போட்டி நடைபெற்றது. இதில் கோவை புனித மைக்கேல் மேல்நிலைப் பள்ளி மாணவனும், கோவை உக்கடம் பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி மாணவன் அபூபக்கர் சித்திக் கட்டா போட்டியில் முதல் இடத்தை பிடித்து வெற்றி பெற்றார். வெற்றி பெற்ற மாணவன் அபூபக்கர் சித்திக்கு பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி நிறுவனர் கராத்தே மாஸ்டர் சிஹான் ஜெமிஷா சான்றிதழ் மற்றும் நினைவு கோப்பை வழங்கி பாராட்டினர், இதில் கராத்தே பயிற்சியாளர். முக்தார் மற்றும் திருப்பூர் கராத்தே மாஸ்டர் ஹரி கிருஷ்ணன். ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது இதில் புதிய உறுப்பினர்களுக்கு புதிய நிர்வாகிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கி உரையாற்றினார் நிறுவனத்தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் அவர் பேசும்போது நாடார் சமுதாய மக்களே வலைதளங்களில் போலியான கணக்குகளை தொடங்கி நமது சமுதாயத்தையும் பெருந்தலைவர் காமராஜரையும் இழிவுபடுத்த ஒரு கூட்டம் தொடங்கியுள்ளது நம் சமுதாய இளைஞர்கள் இதுபோன்ற விஷமத்தனமான செய்திகளை கண்டு ஆவேசப்பட வேண்டாம் கவனமுடன் வலைதளங்களை கையாளுங்கள் நாடார் சமுதாயத்தைசாராதசில நபர்கள் நம்முடைய கிராமங்களில் இருந்து நகரங்களுக்குவேலைக்குச் செல்லும் நம்முடைய சமுதாய பெண் பிள்ளைகளிடம் தங்களை நாடார் என்று அடையாளப்படுத்திக் கொண்டு நம்



பிள்ளைகளிடம் அன்பாக பழகி காதல் வலை விரித்து மோசம் செய்கின்ற ஒரு சூழலும் இப்போது அதிகரித்து வருகிறது தமிழகத்தில் நாடார் சமுதாய கிராமங்களில் தேர்தல் அறிவிப்பதற்கு முன்பே இப்போதே ஒவ்வொரு கட்சியை சேர்ந்த நம்மவர்கள் அவரவர் வாழும் ஊர்களில் தேர்தலில் நாம் சார்ந்த கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பணியை தொடங்கி இருக்கின்றார்கள் நாம் பிறந்த நாடார் சமுதாயத்திற்க்கு எந்த இடத்திலும் தலைகுனிவு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றால் நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் நாம் இருக்கின்ற அரசியல் கட்சிவெற்றிபெறவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் நாம் பிறந்த சமுதாயமும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று சமுதாயப் பணியும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று பேசினார் இந்த நிகழ்ச்சியில் தென்காசி மேற்கு மாவட்ட தலைவர் குருசாமி நாடார் மாவட்ட கல்வி குழு உறுப்பினர் முப்புடாதி கடையநல்லூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன் நாடார் ஒன்றிய இளைஞர் அணி தலைவர் கார்த்திகைக்குமார் கிளை இளைஞரணி செயலாளர் சித்திரைத் குமார் வைரவன் சுப்பிரமணியன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# குருடம்பாளையம் ஊராட்சி ஜங்கமநாயக்கன்பாளையத்தில் ரூ.81 லட்சத்தில் அங்கன்வாடி, துணை சுகாதார நிலையம்

## MP கணபதி ராஜ்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்





கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், குருடம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ஜங்கமநாயக்கன்பாளையம் பகுதியில் மாவட்ட ஆட்சியர் விருப்ப நிதியில் இருந்து ரூபாய் 18 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் ரூபாய் 63 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம் ஆகியவற்றை கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் ரிப்பன் வெட்டியும் குத்துவிளக்கு ஏற்றியும் திறந்து வைத்தார்.

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், குருடம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ஜங்கமநாயக்கன்பாளையம் பகுதியில் மாவட்ட ஆட்சியர் விருப்ப நிதியில் இருந்து ரூபாய் 18 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மையம் கட்டப்பட்டது.

அதேபோல் அருகில் ரூபாய் 63 லட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையம் கட்டப்பட்டது.

இவற்றின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அங்கன் வாடி மையத்தை ரிப்பன் வெட்டியும் குத்துவிளக்கு ஏற்றி வைத்தும் திறந்து வைத்தார். முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வந்த பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமாருக்கு அங்கன்வாடி மைய குழந்தைகள் கைகளில் ரோசாப்பு கொடுத்து வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, ஒன்றியச் செயலாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து அருகில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்தையும் கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார்ரிப்பன்வெட்டியும் குத்துவிளக்கு ஏற்றி வைத்தும் திறந்து வைத்தார். தொடர்ந்து கர்ப்பினி பெண்களுக்கு தாய், சேய் நலப்பெட்டகங்களை வழங்கினார். மேலும் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில்பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய உதவி செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், ஊராட்சி செயலர் சண்முகம், துணை சுகாதார நிலைய மருத்துவர், திமுக மகளிர் அணியினர் உள்பட கட்சி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் செயற்குழு கூட்டம்



தென்காசியில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் செயற்குழு கூட்டம் தென்காசி மெக்விக்டர் நடுநிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சண்முககுமார் தலைமை வகித்தார். ராஜ்குமார் முன்னிலைவகித்தார்.இரா. ரவி வரவேற்புரையாற்றினார். கீழ்க்கண்ட பொருட்கள் குறித்துவிவாதித்தனர்,

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் - பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் இவற்றில்எதைதேர்ந்தெடுப்பது என்பது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தென்காசி வட்டார தேர்தல் பிப்ரவரி -2026 இல் நடைபெற உள்ளது குறித்து விவாதிக்கப்பட்டது. வட்டார வரவு செலவு கணக்குகள் 2025-26ம் ஆண்டு வரை மாவட்டத்தில் முழுமையாக கணக்கு ஒப்படைக்கப்பட்டு நமது வட்டாரத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு அதன் நகல் ஒன்று வழங்கப்பட்டது குறித்து தெரிவிக்கப்பட்டது. மார்ச் மாதம் எட்டாம் தேதி மகளிர் தினத்தன்று எட்டயபுரத்தில் மகளிர் தின மாநாடு நடைபெற உள்ளது குறித்து விவாதிக்கப்பட்டது . STFI மூலமாக டெல்லியில் நடைபெறும் பேரணியில் கலந்து கொண்டு சுற்றுலா சென்று வருதல் தொடர்பாக கலந்த ஆலோசிக்கப்பட்டது. தென்காசி வட்டாரத்தில்அனைத்துபள்ளிகளுக்கும் அமைப்பின் சார்பில் 2026 - ஆம் ஆண்டிற்கான காலண்டர் மற்றும் கூட்டணி பொறுப்பாளர்களுக்கு டைரி காலண்டர் வழங்கப்பட்டது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நிர்வாகிகள் ரா.குத்தா லிங்கம், சங்கர நாராயணன்,ஆல்வின், இ.சங்கர குமாரசாமி, மகேந்திரன் உள்ளிட்ட ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில் ஐயப்பன் நன்றி கூறினார்.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு நிறைவு விழா சென்னை வள்ளுவர் கோட்டத்தில் வருகிற 1/2/2026 மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளதை நிகழ்ச்சி ஏற்பாடுகளைமாநில செயலாளர்தோழர். மூ.வீரபாண்டியன் மாநிலதுணைசெயலாளர்கள் தோழர் N.பெரியசாமி ExMLA தோழர் M.ரவி மாநில செயற்குழு தோழர் தி.இராமசாமி ExMLA மாநில நிர்வாக குழு P.லிங்கம் ExMP மாநில குழு தோழரே. ஏழுமலை உள்ளிட்ட தோழர்கள் பார்வையிட்டார்கள்..

## கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள மஸ்ஜிதே நூர் பள்ளிவாசலில்

# நியூ கிரசண்ட் மழலையர் பள்ளி, தி.ஐ. பவுண்டேசன் ஆகியவை இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம்



கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் மஸ்ஜிதே நூர் பள்ளிவாசல் அமைந்துள்ளது. இப்பள்ளி வாசல் மற்றும், நீயூ கிரசண்ட் மழலையர் பள்ளி, தி ஐ பவுண்டேசன்இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் பரிசோதனை, கண் புரை சிகிச்சை முகாமில் இப்பகுதியை சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயனடைந்தனர்.

தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின் கீழ், கோவை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் வழிகாட்டுதலின் படி, ஒவ்வொரு 40 வயதுக்கு மேற்பட்டவர்களும் தங்களது கண்களை பரிசோதனை செய்து கொள்வது அவசியமான ஒன்றாக உள்ளது. இதன் ஒரு பகுதியாக ஆண்டு தோறும் இங்கு கண்பரிசோதனை முகாம் நடத்த பட்டு வருகின்றது. மேலும், இங்கு பரிசோதனைக்கு வரும் பொதுமக்களுக்கு, கண்களில் புரை இருப்பது கண்டறிய பட்டால், இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாமும் நடத்த பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிவாசல் தலைவர் இ.சுக்குருல்லா பாபு, செயலாளர் தாஜ்முகம்மது, அறங்காவலர் ஜீ.டி, ஜபார் அலி, மற்றும் நிர்வாகிகள் மொகரூர் பாஷா, அப்துல்லா, ஏ.கே.லால்பாட்சா,மூபீர், ஜே.எம்.பாஷா, மக்கள் நல்லுறவு சதிஷ்குமார், ஆனந்த்,பிரகாஷ்,சித்திக், லோகேஷ், மூனாவர், மற்றும் 33 ம் வார்டு கவுன்சிலர் கிருஷ்ணண், ஐ பவுன்டேசன் மருத்துவர்கள், செவிலியர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். காலை 9 மணியளவில்துவங்கிய இந்தகண் பரிசோதனை முகாம், மதியம் 2.மணி வரை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு கோவையில் நடைபெற்ற சைக்கிள் பேரணியில் இளைஞர்களுடன் சேர்ந்து மாவட்ட ஆட்சியரும் சைக்கிள் ஓட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்




16வது தேசிய வாக்காளர் தினம் இன்று நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகின்றது. இதனை முன்னிட்டு, வாக்கு செலுத்துவதின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் கொண்டு செல்லும் விதமாககோவையில்விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது.

இந்த சைக்கிள் பேரணியை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் கிரியப்பனவர் துவங்கி வைத்தார். தொடர்ந்து, துணை ஆட்சியர் பிரசாந்த் உள்ளிட்ட அதிகாரிகளுடன் இணைந்து, ஆட்சியர் பவன்குமாரும் சைக்கிள் ஓட்டி பேரணியில் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பேரணியில் பங்கேற்ற சைக்கிள் வீரர்கள்,

"இந்திய ஜனநாயகத்தின் இதயத்தில் குடிமகன்",

"எனது இந்தியா,எனது வாக்கு, நான் பாரதம்"

என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி நகரம் முழுவதும் உலா வந்தனர்.

கலெக்டர் அலுவலகத்தில் துவங்கிய இந்த சைக்கிள் பேரணி, காந்தி பார்க், ஜி.சி.டி. கல்லூரி வழியாக காந்திபுரம் 100 அடி சாலை, பந்தய சாலை உள்ளிட்ட பகுதிகளை சுற்றி, மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்அலுவலகத்தை வந்தடைந்தது. சுமார் 20 கிலோமீட்டர்சுற்றளவில் நடைபெற்ற இந்த பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள் வீரர்கள் பங்கேற்றனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலரும் சைக்கிள் வீரருமான விஷ்ணு பேசுகையில்,

"கோவையில் கடந்த இரண்டு தேர்தல்களில் வாக்குப்பதிவு சதவீதம் குறைவாக இருந்தது. சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் 58 சதவீத வாக்குகள் மட்டுமேபதிவாகின.

இனிவரும் தேர்தலில் இந்த நிலை மாறி, 100 சதவீத வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது. ஜனநாயகத்தில் வாக்கு என்பதுமிகமுக்கியமான ஆயுதம். முதல் தலைமுறை வாக்காளர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் வாக்களித்து ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும்" என தெரிவித்தார்.

# தமிழக வெற்றி கழகத்திற்கு விசில் சின்னம்; செங்கல்பட்டு மாவட்டத்தில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றி கழகத்திற்கு தேர்தல்சின்னமாக விசில் சின்னம் வழங்கப்பட்டது கொண்டாடும்விதமாகமதுராந்தகம் நகரில்

நகரப் பொறுப்பாளர்கள் விசில் மற்றும் இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள் .மேலும் வருகின்ற2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழக சார்பில் தேர்தல் களத்தில் போட்டி இடுகின்றது

இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகத்திற்கு தேர்தல் ஆணையம் விசில் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

இதை கொண்டாடும் வகையில் தேர்தல் ஆணையத்திற்கு நன்றி தெரிவித்து மதுராந்தகம் நகரம் தமிழக வெற்றிக் கழகம் சார்பாக மதுராந்தகம் பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி விசில் கொடுத்தும் கொண்டாடினர்

இதில் மதுராந்தகம் தமிழக வெற்றி கழகம் மாவட்டம் மற்றும் நகர பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்முறை குறித்த விழிப்புணர்விற்கான நடமாடும் செயல்முறைவிளக்கவாகனத்தினைதுவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியர் சிவானந்தம், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி (முகமை) பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) தேன்மொழி (வளர்ச்சி) ரமேஷ் கிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

## தேசிய இளைஞர் தினம்: புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலில்

# அமரடக்கி புன்னகை அறக்கட்டளை சார்பில் மரகன்றுகள் மஞ்சபை விழிப்புணர்வு



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், பிராந்தனி அரசுநடுநிலைப்பள்ளி தலைமைஆசிரியை திருமதி .அன்னமேரி புன்னகை அறக்கட்டளைநிறுவனர் ஆ.சே. கலைபிரபு அவர்கள் முன்னிலையில் தேசிய இளைஞர் தினம் இளைஞர்களின் ஆற்றலைக் கொண்டு நாட்டையும் சமுதாயத்தையும் வலிமையாக்கிட முனைந்த சுவாமி விவேகானந்தர் பிறந்த ஜனவரி 12-ஆம் நாள் தேசிய இளைஞர் நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தியாவின் சுதந்திர உணர்வை தட்டி எழுப்பியதோடு, சாதி, மதங்களைக் கடந்து இளைஞர்களின் வழிகாட்டியாக திகழ்ந்த சுவாமிவிவேகானந்தர் அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்க அவர் பிறந்த இந்நாளில் உறுதியேற்போம். பள்ளி மாணவ மாணவிகளுக்கு மரகன்றுகள் வழங்கினர் பிறகு பொதுமக்கள், மற்றும் மாணவ, மாணவிகள் கடைக்கு செல்லும்போதுதுணிப் பையைப் பயன்படுத்துவோம்,

நெகிழியைத் தவிர்ப்போம் என்று விழிப்புணர்வு செய்யப்பட்டது சுற்றுச்சூழலை

பாதுகாக்க வேண்டும் என்றும் பலவகை மரகன்றுகள் வழங்கி

பாதுகாப்பாக வளர்க்க வேண்டும், நெகிழியை தவிர்ப்போம் என்று விழிப்புணர்வு செய்யப்பட்டதுஇதில்பள்ளி ஆசிரியர்கள் மாணவ ,மாணவிகள், மற்றும் புன்னகை அறக்கட்டளை நிர்வாகிகள் திரு.அப்பாசாமி

திரு. பாக்கியராஜ் திரு . மதிமுனிஷ் கலந்து கொண்டு வழங்கினர்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அடுத்த ஆணைக்குன்றம் ஊராட்சியை சார்ந்த செல்வம் புனிதா அவர்களின் மகனும் தமிழக வெற்றி கழகம் கட்சியின் வந்தவாசி ஒன்றிய கழக நிர்வாகி அபிஷேக்_நிவேதா திருமண நிச்சயதார்த்த விழா மதுராந்தகம் தனியார் மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது இவ்விழாவில் அரசியல் பிரமுகர்கள் வழக்கறிஞர்கள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் உறவினர்கள் நன்பர்கள் என திரளானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்




தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் 2026 தொடர்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் பொதுமக்களிடம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை முறை இயந்திரங்களின் விழிப்புணர்வு தொடர்பான வாகனங்களை இன்று (25.01.26) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் கொடியசைத்து துவக்கி வைத்தார்.




பழங்குடியினர் நலத்துறையின் கல்வி முன்னெடுப்பு, பெற்றோர்களுடன் மாணவர்களுக்கான உயர்கல்வி கலந்துரையாடல் வழிகாட்டி நிகழ்ச்சி ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், பன்னாரியம்மன் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்றது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (24.01.2026) அன்று ஈரோடு வா.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை விடுதிகளில்தங்கிபயிலும்மாணவ,மாணவியர்களுக்கானகலைத்திருவிழா2026விளையாட்டுபோட்டிகளில்பங்கேற்று வெற்ற பெற்ற வேலம்பாளையம், சமூக நீதி கல்லூரி மாணவர்கள் விடுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு கேடயத்தினை வழங்கினார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (25.01.2026) அலுவலக கூட்டரங்கில் 16 வது தேசிய வாக்காளர் தினவிழா 2026 ல் "எனது இந்தியா எனது வாக்கு" தேர்தல் விழிப்புணர்வு குறித்து பேசிய மாணவிகளுக்கு புத்தகங்கள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) தேன்மொழி (வளர்ச்சி) ரமேஷ் கிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் 25 வது மாநிலப் பொதுக்குழு கூட்டம் ஈரோட்டில் நடைபெற்றது






தமிழக இஸ்லாமியர்களின் பேரியக்கமான தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் 25 வது மாநிலப் பொதுக்குழு நேற்று (25.01.2026) ஈரோடு பிளாட்டினம் மஹாலில் நடைபெற்றது. இம்மாநிலப்பொதுக்குழுவிற்கு மாநில மேலாண்மைக்குழுத் தலைவர் சகோதரர் ஷம்சுல்லுஹா ரஹ்மானி தலைமை தாங்கினார்கள், இப்பொதுக்குழுவில்மாநிலத்தலைவர் R.அப்துல் கரீம் MISC, மாநிலப் பொதுச்செயலாளர் A.முஜிபுர் ரஹ்மான், மாநில தணிக்கைக்குழுத்தலைவர் M.S. சுலைமான் உள்ளிட்ட மாநில உயர்நிலைக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, கிளை நிர்வாகிகள், மாவட்ட பேச்சாளர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்

இப்பொதுக்குழுவில் இன்றைய அரசியல் சூழல், வரவிருக்கும் சட்ட மன்றத் தேர்தல், சிறுபான்மையினரின் நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, குறிப்பாக தமிழகத்தில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டை உயர்த்துவது குறித்தும், ஆளும் பாஜக அரசின் சிறுபான்மை விரோத போக்கை கண்டித்தும், இந்தியாவில் சிறுபான்மைகளுக்கெதிராக நடக்கும் வன்முறைகள் குறித்தும், தமிழகத்தில்அதிகரித்துள்ள போதை பொருள் நடமாட்டம் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.,

பத்திரிக்கையாளர்களை சந்தித்த மாநிலத் தலைவர் பத்திரிக்கையாளர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்தார்கள், மேலும் வரும் ஏப்ரல்' 2026 முதல் R.அப்துல் கரீம் அவர்கள் ஜனவரி' 2027 வரையான 10 மாத காலங்கள் "அண்ணல் நபியின் அழகிய முன்மாதிரி" எனும் தலைப்பில் பல்வேறு வடிவங்களில் இஸ்லாமிய மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தன் பேட்டியில் கூறினார்.

இப்பொதுக்குழுவில் மாநில பொருளாளர் A. இப்ராஹிம், மாநில துணைத்தலைவர் K.தாவூத் கைசர், மாநில துணைப்பொதுச்செயலாளர் A.K.அப்துர்ரஹீம், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.மாநிலச்செயலாளர் K.சித்திக் நன்றியுரையோடு இந்நிகழ்ச்சி நிறைவுற்றது.

# ஈரோட்டில் பிரம்மாண்ட தென்னிந்திய அளவிலான கராத்தே போட்டி: 45 பேருக்கு மிதிவண்டிகள் பரிசை சந்திரகுமார் எம்.எல்.ஏ. வழங்கினார்

ஈரோடு டெக்ஸ்வேலி வளாகத்தில் ஜித்தோ குகாய் ஈரோடு கராத்தே கப் வழங்கும் நான்காவது தென்னிந்திய அளவிலான மாபெரும் கராத்தே போட்டி கோலாகலமாக நடைபெற்றது.

இந்த போட்டியில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து திரளான கராத்தே வீரர் மற்றும் வீராங்கனைகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

குறிப்பாக, 'கட்டா' மற்றும் 'சண்டை' (Kumite) ஆகிய பிரிவுகளில் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் வீரர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், வெற்றி பெற்றவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் அறிவிக்கப்பட்டன.



அதன்படி, பல்வேறு பிரிவுகளில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்த 45-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகளுக்கு தலா 10,000 ரூபாய் மதிப்பிலான மிதிவண்டிகள் பரிசாக வழங்கப்பட்டன.

இந்தவிழாவில்ஈரோடு கிழக்குசட்டமன்றஉறுப்பினர் வி.சி.சந்திரகுமார் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று,வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்தினார்.

மேலும், போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்ட மற்ற வீரர்களுக்குக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு சர்வதேச கராத்தே நடுவர் சென்சாய் முத்துராஜு கலந்துகொண்டு முன்னிலை வகித்தார். மாநிலங்களுக்கு இடையேயான இந்த போட்டி இளம் கராத்தே வீரர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. மேலும் இந்த பிரம்மாண்ட நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு மாவட்ட கராத்தேசங்கம்துணைச் செயலாளரும், ஈரோடு மாவட்ட கராத்தே சங்க செயலாளருமான கராத்தே மாஸ்டர் சக்திவேல் சிறப்பான ஏற்பாடு செய்திருந்தார். மேலும் இந்தநிகழ்ச்சிக்குகலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா இது நம்ம ஆட்டம் 2026 ஒன்றிய அளவிலான விளையாட்டுப்போட்டிகளை துவக்கி வைத்தார்



ஈரோடு வ.உ.சி விளையாட்டரங்கத்தில் நேற்று (25.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 'இது நம்ம ஆட்டம் 2026' ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்தார்.

மாநில அளவில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 'இது நம்ம ஆட்டம் 2026' போட்டிகள் நடத்த உத்தரவிட்டுள்ளார்.

அனைத்து ஊராட்சி அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்களிலும் தடகளம், கையுந்துபந்து, கிரிக்கெட் சதுரங்கம், ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றனஇதில்16வயதுமுதல் 35 வரையிலான தகுதியுடைய அனைத்து இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதல் இடம் பெற்றவருக்கு தலா ரூ.3,000/-பரிசுத்தொகையும், இரண்டாம் இடம் பெற்றவருக்கு தலா ரூ.2,000/-பரிசுத்தொகையும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு தலா ரூ.1000/-பரிசுத்தொகையும், வழங்கப்படவுள்ளது. ஈரோடு மாவட்டத்திற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு தலா 4,26,000/-வீதம் 14 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.59,64,000/-வழங்கப்பட்டவுள்ளது.

நேற்றையதினம்நடைபெற்ற ஊராட்சி ஒன்றிய அளவிலான அனைத்து விளையாட்டுப்போட்டிகளிலும் வெற்றி பெற்ற 924 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,74,000/- வீதம் 14 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.24,36,000/- மதிப்பிலான பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ரமேஷ் கிருஷ்ணன் (வளர்ச்சி), ஈரோடு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் சதீஷ்குமார். உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.